ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம :

# நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு)

(மலர்-57) Oct (1) / 2009



நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

'ஸ்ரீ அஹோபில தாஸன்' க.ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு

## உட்பொதிவு


1. ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம் (ஸ்வாமி பராசரபட்டர் பாஷ்யம்)…………………......3

2. ஸ்ரீபாஷ்யம் ………………………………………………………………….....7

3. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் ……………………………………………………...13

4. ஸ்ரீவசனபூஷணம்……………………………………………………………..16

5. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)……….……………………………………..23

6. திருமாலை ……………………………………………………………………....26

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபராசரபட்டர் அருளிச் செய்த

# ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யம்

(பகுதி – 34)

விபவம் என்பது எம்பெருமான் தனது இச்சையின் காரணமாக எடுப்பதாகும். இவையும் வ்யூஹம் போன்றே தேவன், மனிதன், விலங்கு போன்ற எண்ணற்ற உருவங்களாகும். இவையும் இவனது மேன்மையை உள்ளடக்கியவையே ஆகும். கீழே உள்ள ஸாத்த்வத ஸம்ஹிதை வரிகள் காண்க:

ஷாட்குண்ய விக்ரஹம் தேவம் பாஸ்வஜ்ஜ்வலந தேஜஸம்
ஸர்வத: பாணிபாதம் தத் இதி உபக்ரம்ய
பரம ஏதத் ஸமாக்யாதம் ஏகம் ஸர்வாச்ரயம் விபும்
ஏதத் பூர்வம் யத்ரயம் ச அந்யத் ஞானாத்யை: பேதிதம் குணை:
நாநாக்ருதி ச தத் வித்தி விபவம் புக்தி முக்திதம்

**இதன் பொருள்** – ஆறு முக்கியமான குணங்கள் உள்ளிட்ட பல குணங்களுடன் எம்பெருமானின் விக்ரஹம் உள்ளது. அவன் தனது புத்தி மற்றும் தேஜஸ் மூலமாக ஒளிர்ந்தபடி உள்ளான். அவனுக்கு எங்கும் கால்களும் கைகளும் உள்ளன. இதுவே ஒப்பில்லாத பரரூபம் ஆகும். இது அனைத்திலும் வ்யாபித்து, அனைத்தையும் தாங்கியபடி உள்ளது. இதில் இருந்து மேலும் மூன்று ரூபங்கள் (ஸங்கர்ஷணன், ப்ரத்யும்நன், அநிருத்தன்) வெளிப்படுகின்றன. இவைகளுக்குத் தனித்தன்மை வாய்ந்த ஞானம் மற்றும் குணங்கள் உள்ளன. இவையே பலவிதமான பலன்களை அளிக்கின்றன. இவையே வ்யூஹம் எனப்படுகின்றன. விபவம் என்பது இரண்டு வகைப்படும். இவை முக்யம் மற்றும் அநுவ்ருத்தி என்பதாகும். இவையும் ஞானம் உள்ளிட்ட குணங்கள் கொண்டவையே ஆகும். இத்தகைய விபவம் என்பது பல ரூபங்கள் கொண்டதாகும். அவற்றின் ஆராதனை பலவிதமான பலன்களை அளிக்கவல்லதாகும்.

இவற்றில் மத்ஸ்யம், கூர்ம்ம் போன்றவை நேரடியாக வெளிப்பட்டவையாகும். ஒரு சில ரூபங்கள் முனிவர்களின் வடிவில் வெளிப்பட்டவையாகும் (உதாரணம் வ்யாஸர்). மேலும் சிலவற்றில் தனது சக்தியை ஒரு சில காலம், ஒரு சில

புருஷர்களின் மூலமாக வெளிப்படுத்துகிறான் (உதாரணம் புரஞ்ஜயன் போன்றோர்). மேலும் சிலவற்றில் (அர்ச்சாவதாரம்) தன்னை விக்ரஹ வடிவத்தில் வெளிப்படுத்திக் கொள்கிறான். ஆக பரரூபம் தவிர நான்கு விதமாக வெளிப்படும் விதங்கள் உள்ளன.

இங்கு ஒரு சிலர் ஓர் ஆக்ஷேபம் எழுப்பக்கூடும் - நான்முகன் மற்றும் பரமாத்மா ஆகியோருக்கு இடையே எந்தவிதமான வேறுபாடுகளும் இல்லை என்று ஒரு சில ப்ரமாணங்கள் கூறுகின்றன. ஆகவே நான்முகன் முதலியவர்களையும் பகவானின் அவதாரமாகவே கொள்ளவேண்டும் - என்று இவர்கள் கூறலாம். இதற்குப் பதில் - இதனை ஏதும் அறியாதவர்களின் பிதற்றல்கள் என்றே கொள்ளவேண்டும். இப்படிக் கொண்டால் மனிதர்களாகிய நம்மைப் போன்றவர்கள் தொடக்கமாகப் புல்பூண்டு உள்ளிட்ட அனைத்தும் அவனது அவதாரங்கள் என்றே கொள்ளும்படி ஆகிவிடும் -காரணம் நம் போன்றவர்கள் தொடங்கி புல்பூண்டு உள்ளிட்ட பலவற்றுக்கும் நான்முகனுக்கும் எந்தவிதமான வேறுபாடும் இல்லை (அனைத்தும் ஜீவன்) என்றே பல இடங்களில் கூறப்பட்டுள்ளது. இதனைச் சாந்தோக்ய உபநிஷத் (3-14-1) - ஸர்வம் கலு இதம் ப்ரஹ்ம - இவை அனைத்தும் ப்ரஹ்மம் - என்றது.

மேலும் பல ப்ரமாணங்களின்படி நான்முகன் உள்ளிட்ட யாரும் பகவானின் அவதாரங்கள் என்று கூறப்படவில்லை. இவர்களும் தேவர்கள், மனிதர்கள் போன்று படைக்கப்பட்டவர்களே என்று ஸ்ருஷ்டி பற்றிக் கூறும் பகுதிகளில் தெளிவாகவே உள்ளது. மேலும் பகவத் சாஸ்திரம் எனப்படும் பாஞ்சராத்ர ஆகமத்தில் நான்முகன், ருத்ரன் போன்ற பலரும் ப்ராதுர்பாவங்கள் என்னும் பகவானின் அவதாரங்களைக் காட்டிலும் வேறுபட்டவர்கள் என்று கூறப்பட்டது. இவர்கள் பகவானின் மேன்மையில் ஒரு துளி மூலமாக உருவாக்கப்பட்டவர்கள் ஆவர். இவர்களது இருப்பு மற்றும் செயல்பாடுகள் அனைத்தும் பகவானின் மற்ற அவதாரங்களை நம்பியே உள்ளன. பௌஷ்கர ஸம்ஹிதை கீழே உள்ளது போன்று கூறுகிறது:

> ஞானோபதேஷ்டா பகவாந் கபிலாக்ஷஸ்து அதோக்ஷஜ:
> வித்யாபூர்த்தி: சதுர்வக்த்ரோ ப்ரஹ்மா வை லோகபூஜித:
> ததம்சபூதோ வை யஸ்ய விச்வ வ்யஞ்ஜன லக்ஷண:

**இதன் பொருள்** - சிவந்த கண்கள் கொண்ட அதோக்ஷஜன் என்னும் பகவான் அனைத்து ஞானங்களையும் போதிக்கும் ஆசானாக உள்ளான். ஞானமயமாகவும், அனைத்து உலகங்களால் பூஜிக்கப்படுபவனாகவும் உள்ள நான்முகன் இத்தகைய பகவானின் அம்சமாகவே உள்ளான். அவன் பகவானுக்கு அடங்கியவனாகவே உள்ளான். பகவானிடம் இருந்து பெறப்பட்ட ஞானத்தையே இவன் மீண்டும் அளிப்பவனாக உள்ளான்.

இங்கு உள்ள யஸ்ய என்ற பதம் பகவான் கபிலராக அவதரித்தபோது அந்த விஷ்ணுவின் ஒரு பகுதியாக மட்டுமே நான்முகன் உள்ளான் என்பதை உணர்த்துகிறது. "விச்வ வ்யஞ்ஜன லக்ஷண" என்பதன் மூலம் இவன் பகவானுக்கு உட்பட்டவன் என்பது விளங்குகிறது. பகவானின் அச்சம் என்பது மிகவும் முதன்மையான நிலை என்பதை ப்ரஹ்மசூத்திரம் (2-3-42) – அம்சோ நாநா வ்யபதேயத் – என்கிறது.

இது போன்றே அனலசாயி (அக்னி மீது சயனித்துள்ளவன்) என்று போற்றப்படும் எம்பெருமானிடம் இருந்து மற்ற தெய்வங்கள் வெளிப்படுவது பற்றிக் கூறப்படுகிறது. உதாரணமாகக் கீழே உள்ள வரிகள் காண்க:

யுகாந்தரேஷு ச ஸம்ஹாரம் ய கரோதி ச ஸர்வதா
சங்கராக்யோ மஹாருத்ர: ப்ராதுர்பாவாந்தரம் ஹி தத்
தேவஸ்ய அலைசாயே: வை ஸர்வாத: ஸம்ஸ்திதஸ்ய ச

**இதன் பொருள் -** யுகங்களின் முடிவில் சங்கரன் என்று அழைக்கப்படும் மஹாருத்ரன் அனைத்து உலங்களையும் அழிக்கிறான். இவன், அனைத்திற்கும் ஆதாரமாக உள்ளவனும், அனலசாயி என்று அழைக்கப்படுபவனும் ஆகிய எம்பெருமானிடம் இருந்து வெளிப்பட்டவன் ஆவான்.

மேலே உள்ள "ப்ராதுர் பாவ அந்தர" என்பதில் உள்ள "அந்தர" என்ற பதம் கீழே உள்ள வரியில் காணப்படும் "அந்தர" என்ற பதத்தின் பொருளில் இருந்து மாறுபட்டதாகும்:

இக்ஷி க்ஷீர குடாநீநாம் மாதுர்யஸ்ய அந்தரம் மஹத்

ப்ராதுர்பாவம் என்பதும், ப்ராதுர் பாவாந்தரம் என்பதும் மாறுபட்டவை எனத் தெளிவாகவே கூறப்பட்டது. இதனைக் கீழே உள்ள வரிகளில் காணலாம்:

ப்ராதுர் பாவாஸ்து விஜ்ஞேயா: ஸ்வவ்யாபார வசாத்துவை
ப்ராதுர்பாவாந்தரா: தத்த்வத் அம்சஸ்ய து வசாதபி

**இதன் பொருள் -** எம்பெருமானின் செயல்களின் மூலம் மட்டுமே ஏற்படுவது ப்ராதுர்பாவம் எனப்படும். மற்ற அனைத்தும் (ப்ராதுர்பாவாந்தரம்) எம்பெருமானின் அம்சமாகவே உள்ளன (அவனுடைய ஒரு மிகச் சிறிய பகுதி).

மேலே உள்ள ச்லோகத்தில் காணப்படும் – ஸ்வவ்யாபார வசத் – எம்பெருமானின் செயல் மூலம் – என்பதன் வாயிலாக செயல்கள் அனைத்தும் தனித்தன்மை கொண்ட பகவானின் மூலம் என்பது உணர்த்தப்பட்டது. மேலும் அந்த ச்லோகத்தில் காணப்படும் "து" என்பதும், "அம்ச வச" என்பதும் மூலமாக ப்ராதுர்பாவத்திற்கும், ப்ராதுர்பாவாந்தரத்திற்கும் உள்ள வேறுபாடு உணர்த்தப்பட்டது. மேலும் ப்ராதுர்பாவாந்தரம் என்பது ப்ராதுர்பாவத்திற்குள் அடங்கியது ஆகும். இது போன்றே வேறு ஒரு இடத்திலும் காண்க:

ப்ராதுர்பாவந்தரை: ஸார்தம் ப்ராதுர்பாவை: த்விஜ அகிலை:
அப்யயை: ப்ரபவாக்யைஸ்து கௌணமுக்யை: ஸுரேச்வரை:

**இதன் பொருள் -** இது போன்றே முக்கியம் மற்றும் ஔபசாரிகம் (முதன்மையானது, இரண்டாம் பக்ஷமானது) ஆகிய இரண்டிற்கும் வேறுபாடு உள்ளதைக் காண்க. அந்தணரே! ப்ராதுர்பாவங்கள், ப்ராதுர்பாவாந்தரங்கள், ஸ்ருஷ்டி, ஸம்ஹாரம் போன்ற அனைத்தும் முதன்மையானது, சார்ந்தது என்று இருவகையில் உள்ளன - என்று கூறப்பட்டது.

ஸ்வபாவம் அஜஹத் சச்வத் ஆகாராந்தரம் ஆக்ருதே:
யத்தத்வம் அம்சஸம்பூதம் ப்ராதுர்பாவாந்தரம் து தத்

**இதன் பொருள் -** ப்ராதுர்பாவம் என்பது எம்பெருமான் தனது ஸ்வபாவத்தை விட்டுவிடாமல் மேலும் ஒரு சரீரம் கொள்வதாகும். எம்பெருமானின் அம்சம் என்பது ப்ராதுர்பாவாந்தரம் என்பதன் மூலமே வெளிப்படுகிறது.

...தொடரும்

அழகியமணவாளன் திருவடிகளே சரணம்
ஸ்வாமி பராசரபட்டர் திருவடிகளே தஞ்சம்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

பகவத் ராமானுஜர் அருளிச் செய்த

# ஸ்ரீபாஷ்யம்

(பகுதி – 57)

## அதிகரணம் – 8- இதராதிகரணம்

**ஆராயப்படும் விஷயம் -** முன்னர் செய்த புண்ணியங்கள் அழிந்துவிடும், இனி செய்யப்படும் புண்ணியங்கள் ஒட்டுவதில்லை என்பது நிரூபிக்கப்பட உள்ளது.

4-1-14. இதரஸ்ய அபி ஏவம் அஸம்ச்லேஷ: பாதே து

**பொருள் -** புண்ணியங்களுக்கும் அதே போன்று, சரீரம் நீங்கும் நேரத்தில்.

**விஷயம் –** கடந்த அதிகரணத்தில் முன்னர் செய்த பாவங்களின் அழிவும், இனி வரப்போகும் பாவங்களின் ஒட்டாமையும் வித்யையின் மேன்மை காரணமாக உண்டாகின்றன என்பது கூறப்பட்டது. இந்த அதிகரணத்தில் அதே போன்று ஒட்டாமையும், அழிவும் பாவங்கள் போன்றே புண்ணியத்திற்கும் வித்யையின் மேன்மை காரணமாக உண்டாகும் என்பது கூறப்பட உள்ளது. பாவங்கள் மற்றும் புண்ணியங்கள் குறித்துக் கூறப்பட்ட பின்னர், சாந்தோக்ய உபநிஷத் (8-4-1) – ஸர்வே பாப்மாந: அதோ நிவர்த்தந்தே - ப்ரஹ்ம ப்ராப்தி ஏற்படத் தடையாக உள்ளதால் பாவம் என்று கூறப்படும் புண்ணிய பாவ கர்மங்கள் அனைத்தும் உபாஸகளை விட்டு விலகுகின்றன - என்றும், கௌஷீதகீ உபநிஷத் (1-4) – தத் ஸுக்ருத துஷ்க்ருதே தூநுதே - புண்யபாவங்களை உதறுகிறான் - என்றும் கூறப்பட்டது. மோக்ஷத்தில் விருப்பம் உள்ள ஒருவனுக்கு ஒரு புண்ணிய செயலானது வேண்டாத பலனை ஏற்படுத்தும் என்றால், அதுவும் பாவங்கள் என்றே கொள்ளப்படுகிறது.

**சந்தேகம் –** புண்ணிய கர்மங்கள் சாஸ்த்ரங்களால் ஒப்புக் கொள்ளப்பட்டவை ஆகும். மேலும் அவை ஒரு சிலரால் அவர்கள் விரும்பும் நல்ல பலன்களை அளிப்பதாகவே உள்ளன. இப்படி உள்ளபோது அவை வித்யைக்குத் தடையாக இருக்குமோ?

**பூர்வபக்ஷம் –** ப்ரஹ்மஞானிகளுக்கும் கூட புண்ணிய பலன்கள், மழை, உணவு போன்றவை அவர்களின் உபாஸனைகளை முழுவதுமாக இயற்றி முடிக்க அவசியமாகின்றன. இப்படி உள்ளபோது அவற்றின் அழிவு பற்றி எவ்விதம் கூற இயலும்?

**ஸித்தாந்தம் –** "பாதே து" – அதாவது சரீரம் விழும் நேரத்தில் அந்தப் புண்ணிய பலன்கள் அழிகின்றன. இதன் கருத்து - சரீரம் நீங்கும்போது அடைய உள்ள ப்ரஹ்மப்ராப்திக்குத் தடையாக உள்ளதால், அந்த நேரத்தில் புண்ணிய பலன்களும் விலகுகின்றன.

## இதராதிகரணம் ஸம்பூர்ணம்

## அதிகரணம் – 9 - அநாரப்த கார்யாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம் –** பலன் அளிக்கத் தொடங்காத புண்ணிய பாவ பலன்கள் மட்டுமே அழிகின்றன என்பது நிருபிக்கப்பட உள்ளது.

4-1-15. அநாரப்தகார்யே ஏவது பூர்வே தததவதே:

**பொருள் -** இதுவரை பலன் அளிக்கத் தொடங்காத புண்ணியபாவங்கள் மட்டுமே அழிகின்றன. காலதாமதம் கூறப்படுவதால் ஆகும்.

**விஷயம் -** ப்ரஹ்மவித்யை உண்டாவதற்கு முன்னரும் பின்னரும் நிகழ்கின்ற புண்ணிய கர்மங்கள் பற்றிக் கூறப்பட்டது. இங்கு ஓர் ஐயம் ஏற்படுகிறது.

**சந்தேகம் -** வித்யைக்கு முன்னர் செய்த புண்ணியபாவ பலன்கள் அனைத்தும் அழிகின்றனவா? அல்லது இதுவரை பலன் அளிக்கத் தொடங்காத புண்ணிய பாவ பலன்கள் மட்டுமே அழிகின்றனவா?

**பூர்வபக்ஷம் -** இந்த ஐயம் ஏற்படுவதன் காரணம் சாந்தோக்ய உபநிஷத்தில் (5-14-3) – ஸர்வே பாப்மாந: ப்ரதூயந்தே – அனைத்து பாவங்களும் அழிகின்றன - என்று கூறப்பட்டது. இதன் மூலம் பாவங்களைக் குறிப்பிட்டுக் கூறாமல் அனைத்தையும் கூறியது காண்க. ஆகவே அனைத்துக் கர்மங்களும் அழிவதாகவே கொள்ளவேண்டும். இந்தச் சரீரம் என்பது கர்மம் இயற்றவே ஆகும். அனைத்துக் கர்மங்களும் அழிந்து விட்டால் சரீரம் மட்டும் எவ்விதம் இருக்கும் என்ற சந்தேகம் எழலாம். இது அவசியம் அற்றது. குயவன் தனது சக்கரத்தைச் சுழல வைத்த பின்னர் தனது கையை எடுத்தவுடன் சக்கரம் சற்று நேரம் சுற்றிய பின்னர் மட்டுமே நிற்கிறது. இது போன்று சரீரமும் சிறிது காலம் கர்மங்கள் ஏதும் இல்லாமல் இருக்கலாம். ஆகவே அனைத்துக் கர்மங்களும் அழிகின்றன என்றே கொள்ளவேண்டும்.

**ஸித்தாந்தம் -** அப்படி அல்ல. ப்ரஹ்மவித்யைக்கு முன்னர் விளைந்த புண்ணிய பாவங்களில், பலன் அளிக்கத் தொடங்காத புண்ணிய பாவங்கள் மட்டுமே அழிகின்றன என்றே கொள்ளவேண்டும். ஏன்? சாந்தோக்ய உபநிஷத் (6-14-2) – தஸ்ய தாவதேவ சிரம் யாவந்ந விமோக்ஷ்யே அத ஸம்பத்ஸ்யே – பலன் அளிக்கத் தொடங்கிவிட்ட கர்மம் முடியும் வரையில் சரீரத்தின் தொடர்பு உள்ளது; அதுவரை உபஸகனுக்கு ப்ரஹ்ம ப்ராப்தி ஏற்பட காலதாமதம் உள்ளது – என்றது. இதன் மூலம் சரீரம் நீங்கும்வரை உபாஸகனுக்கு ப்ரஹ்மப்ராப்தி ஏற்படாது என்பது கூறப்பட்டது. மேலும் புண்ணிய பாவங்கள் மூலம் ஏற்பட்ட எம்பெருமானின் மகிழ்ச்சி மற்றும் சீற்றம் ஆகியவற்றைத் தவிர, உடலானது நிலையாக இருப்பதற்குக் காரணமாக ஸம்ஸ்காரம் உள்ளது என்று பூர்வபக்ஷத்தில் கூறப்பட்டதற்கு எந்தவிதமான ப்ரமாணமும் இல்லை.

அநாரப்த கார்யாதிகரணம் ஸம்பூர்ணம்

## அதிகரணம் - 10- அக்னிஹோத்ராத்யதிகரணம்

**ஆராயப்படும் விஷயம் –** பலனை விரும்பாதவர்கள் கூட அக்னிஹோத்ரம் போன்ற நித்ய கர்மங்களை இயற்றியே தீர வேண்டும் என்பது நிரூபிக்கப்பட உள்ளது.

4-1-16. அக்னிஹோத்ராதி து தத் கார்யாயைவ தத் தர்சநாத்

**பொருள் -** அக்னிஹோத்ரம் போன்றவையும் ப்ரஹ்மவித்யைக்கே; இப்படியே வேதங்களில் காணலாம்.

**பூர்வபக்ஷம்** - சூத்திரம் (4-1-14) - இதரஸ்யாப்யேவம் அஸம்லேஷ: - என்பதில் ப்ரஹ்மவித்யைக்குப் பின்னர் ஏற்பட்ட புண்ணிய பலன்களும் ஒட்டாமல் போவதாகக் கூறப்பட்டது. இதன்படி அக்னிஹோத்ரம் போன்றவை நித்யநைமித்திக கர்மங்கள் என்றாலும், அதன் புண்ணிய பலன்கள் ஒட்டாமல் போய்விடும். இவ்விதம் பலன் இல்லாத கர்மங்களை இயற்றுவதற்கு யாரும் முன்வரமாட்டார்கள். ஆகவே விருப்பம் அற்றவர்கள் இது போன்ற கர்மங்களை இயற்றவேண்டிய அவசியமில்லை அல்லவோ?

**ஸித்தாந்தம்** - சூத்திரத்தில் உள்ள "து" என்ற பதம் மற்ற புண்ணிய பலன்களுக்கும் அக்னிஹோத்ரம் உள்ளிட்ட கர்மங்களுக்கும் உள்ள வேறுபாட்டினை உணர்த்துகிறது. அக்னிஹோத்ரம் உள்ளிட்ட நித்யநைமித்திக கர்மங்களுக்கு மற்ற புண்ணிய பலன்களைக் காட்டிலும் வேறுபாடு உண்டு என்பதால், இவற்றின் பலன் ஒட்டாமல் போய்விடுவதில்லை. அக்னிஹோத்ரம் போன்றவை வித்யை ஏற்படுவதன் பொருட்டே அன்றாடம் இயற்றப்பட வேண்டியவை ஆகும். இதனை எப்படி உணரலாம்? ததர்சநாத் – இப்படியே வேதங்களில் கூறப்பட்டுள்ளது. அக்னிஹோத்ரம் போன்றவை வித்யைக்கு வழியாக உள்ளன என்பதை ப்ருஹத் உபநிஷத் (4-4-22) - தமேதம் வேதாநுவசநே ந ப்ராஹ்மணா விவிதிக்ஷந்தி யஜ்ஞேந தாநேந தபஸாநாசகேந – வேத அத்யயனம், யஜ்ஞம், தானம், பலனின் விருப்பம் அற்ற தவம் போன்றவற்றால் ப்ரஹ்மஞானிகள் பரம்பொருளை உபாஸிக்கின்றனர் - என்பதில் காணலாம்.

வித்யை என்பது மரணம் உண்டாகும் நேரம் வரை அன்றாடம் அதிகரித்தபடியே அனுஷ்டிக்கப்பட வேண்டும். இத்தகைய வித்யை வளரும் பொருட்டு அன்றாடம் நித்ய நைமித்திக கர்மங்களை இயற்றியபடி இருக்கவேண்டும். இவ்விதம் அன்றாடம் நித்ய நைமித்திக கர்மங்களை இயற்றவில்லை என்றால், அதனால் ஏற்படும் பாவமானது மன உறுதியைக் குலைத்துவிடும். இதனால் உபாஸனை செய்ய இயலாமல் போய்விடும்.

**பூர்வபக்ஷம்** - வித்யை வளரும் பொருட்டு அக்னிஹோத்ரம் உள்ளிட்ட கர்மங்கள் இயற்றப்படவேண்டும் என்றீர்கள். வித்யைக்கு முன்னர் ஏற்பட்ட புண்ணிய கர்மங்கள் அனைத்தும் அனுபவித்த பின்னர் கழிந்துவிடுகின்றன. இதனைக் கீழே உள்ள வரிகள் கூறுகின்றன:

- சாந்தோக்ய உபநிஷத் (5-10-5) - யாவத் ஸம்பாதம் உஷித்வா - உடல் சரியும்வரை இருந்துவிட்டு
- ப்ருஹத் உபநிஷத் (4-4-6) - ப்ராப்யாந்தம் கர்மணா: - கர்மங்களின் முடிவுவரை

எஞ்சியிருப்பதும், பலன் தரத் தொடங்கியதும் ஆகிய ப்ராரப்த புண்ணியம் பலவும் மோக்ஷம் பெறுவதற்குக்கூட அனுபவித்துக் கழிக்க வேண்டியதாக உள்ளது. இப்படி இருக்கும்போது சாட்யாயந சாகை - ஸுஹ்ருத: ஸாதுக்ருத்யாம் – ஞானியின் புண்ணியத்தை அவன் நண்பர்கள் அடைகின்றனர் - என்று ஏன் கூற வேண்டும்? இப்படியாக அடையும் புண்ணியம் ஏதும் இல்லை அல்லவோ (அடுத்த சூத்திரம் பதில் உரைக்கிறது).

4-1-17. அத: அந்யா அபி ஹி ஏகேஷாம் உபயோ:

**பொருள் -** அக்னிஹோத்ரம் போன்றவற்றைக் காட்டிலும் வேறு சிலவும் உள்ளன. இப்படியே கூறப்பட்டது.

**ஸித்தாந்தம்** - அக்னிஹோத்ரம் போன்ற புண்ணிய கர்மங்களைக் காட்டிலும் வேறான சில புண்ணியங்களும் உள்ளன. இவையும் வித்யைக்குக் காரணமாக உள்ளன. ப்ரஹ்மவித்யை ஏற்படுவதற்கு முன்னும் பின்னும் பலன் மீது விருப்பம் கொண்டு செய்யப்பட்ட புண்ணிய கர்மங்களுக்குள், வலிமையான பாவ கர்மங்களால் தடை செய்யப்பட்ட ஏராளமான புண்ணியங்கள் இருக்கக்கூடும். இவற்றையே சாட்யாயந சாகையில் – தஸ்ய புத்ரா தாயமு பயந்தி ஸுஹ்ருதஸ் ஸாதுக்ருத்யாம் - என்று கூறப்பட்டது. மேலும் தததிகமாதிகரணத்தில் கூறப்பட்ட அழிகின்ற பூர்வ புண்ணியங்களும், ஒட்டாமல் போகின்றன என்ற கூறப்பட்ட புண்ணியங்களும் இவையே ஆகும்.

அடுத்து, முன்பு சூத்திரம் (3-3-41) பல புண்ணிய கர்மங்கள், அவற்றைக் காட்டிலும் வலிமையான பல கர்மங்களால் பலன் அளிக்காமல் இருக்கக்கூடும் - என்று கூறியதை அடுத்த சூத்திரத்தில் நினைவு கூறுகிறார்.

4-1-18. யதேவ வித்யயேதி ஹி

**பொருள் -** வித்யையின் மூலமாக.

**ஸித்தாந்தம்** - சாந்தோக்ய உபநிஷத் (1-1-10) - யதேவ வித்யயா கரோதி ததேவ வீர்யவத்தரம் - எந்த ஒரு கர்மத்தை உத்கீத வித்யையுடன் இயற்றுகிறானோ, அதுவே தடையின்றி பலனைப் பெற்றுத் தருகிறது - என்றது. இதன்படி புண்ணிய கர்மங்கள் பலவும் அவற்றின் பலனை அளிக்க இயலாதபடி பாவ கர்மங்கள் தடுக்கின்றன என்பதும், இந்தத் தடைகளை உத்கீத வித்யை நீங்குகிறது என்பதும் உணர்த்தப்பட்டது. ஆகவே சாட்யாயந சாகையில் கூறப்பட்ட பலன்கள் என்பவை இவ்விதம் தடுக்கப்பட்டு, ஆனால் மீண்டும் பலன் தரத் தொடங்கும் புண்ணியங்கள்

என்பதும், அவையே உபாஸகனின் நண்பர்களுக்குச் சென்று சேர்கின்றன என்பதும் ஆகும்.

அக்னிஹோத்ராத்யதிகரணம் ஸம்பூர்ணம்

தென்னரங்கன் திருவடிகளே சரணம்
தென்னரங்கன் செல்வம் முற்றும் திருத்தி வைத்த இராமாநுசன்
திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீவேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(பகுதி – 57)

## பாகவத சேஷத்வத்தின் முறை

**மூலம்** – இப்பாகவத சேஷத்வம் க்ரயம் செல்லும்படியைப் "பேசிவார் அடியார்கள் எந்தம்மை விற்கவும் பெறுவார்களே" என்று கல்பஸூத்ர வ்யாக்யாதாக்களான பெரியாழ்வார் அருளிச்செய்தார். இது மத்யமபதத்துக்குத் தாத்பர்யார்த்தம். இவ்வர்த்தத்தை அநுஸந்தித்தால் இச்சேஷத்வம் ஸத்வாரகமாகவும் அத்வாரகமாகவும் நின்ற நிலையிலே சேஷ வ்ருத்தியான கைங்கர்யமும் நிற்கும். ஆகையால் தன் சக்திக்கு அநுரூபமாக பகவத்கைங்கர்யத்தினுடைய ஸாத்யாகார விவ்ருத்தியான புருஷார்த்தத்தில் எல்லை நிலத்தைத் தரிசு தூறு விடாதொழியப் ப்ராப்தம். இது,

பர்த்துர்ப்ருத்யகணஸ்ய ச,

ஆப்தோ விஷ்ணோரநாப்தச்ச த்விதா பரிகர: ஸ்ம்ருத:
நித்யோ வந்த்யோ ந வாநித்ய: கர்மவச்யோ முமுக்ஷுபி:

என்று ஸ்ரீபௌஷ்காதிகளிற் சொன்ன ந்யாயத்தாலே பதிவ்ரதாதர்மம் போலே இருக்கிற பரமைகாந்தித்வத்துக்கு மிகவும் உசிதமான பதிசித்தாநுவர்த்தநம் ஆகையால் ஹேத்வந்தரத்தாலன்றிக்கே அநந்யார்ஹ சேஷத்வஞானமடியாக வருகையாலே இவ்வந்ய சேஷத்வம் விருத்தமன்று.

**விளக்கம்** – இப்படியாக உள்ள பாகவத சேஷத்வம் விலைக்கு விறாலும் செல்லும்படியாக உள்ளதைக் கல்பஸூத்ரத்தின் வ்யாக்யான கர்த்தாவாகிய பெரியாழ்வார் தனது திருமொழியில் (4-4-10) - பேசிவார் அடியார்கள் எந்தம்மை விற்கவும் பெறுவார்களே – எம்பெருமானின் திருநாமத்தைக் கூறுபவர்கள் எங்களை விற்கக்கூட உரிமை உள்ளவர்கள் - என்றார். இதுவே திருமந்த்ரத்தின் நடுப்பதமான "நம:" என்பதன் பொருளாக உள்ளது. இந்த அர்த்தத்தில் நாம்

சிந்தனை செய்தால், நாம் எம்பெருமானுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் (அடியார்கள் மூலம்) அடிமையாக உள்ளோம் என்றாகிறது. இதன்படி நாம் செய்யும் கைங்கர்யங்களும் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆகிறது. ஆகவே எம்பெருமானின் அடிமையாக உள்ள ப்ரபன்னன் ஒருவன் தனது சக்திக்கு இயன்றவரையில் பாகவதர்களுக்குத் தொண்டு செய்வதே தங்களின் கடமை என்று அறியவேண்டும். இப்படியாக உள்ள பாகவதர்களுக்குக் கைங்கர்யம் என்ற நிலமானது பாழாகப் போகும்படிச் செய்துவிடாமல், எப்போதும் கைங்கர்யம் என்னும் உழவு செய்தபடி இருக்கவேண்டும். கீழே உள்ள பௌஷ்கர ஸம்ஹிதை வரிகளைக் காண்க:

- பர்த்துர்ப்ருத்யகணஸ்ய ச – தனது கணவன் அருகில் இருந்தாலும் சரி, இல்லாதபோதும் சரி, கணவனையும் அவனது வேலையாட்களையும் கவனிப்பது மனைவிக்குக் குற்றமன்று.

- ஆப்தோ விஷ்ணோரநாப்தச்ச த்விதா பரிகர: ஸ்ம்ருத: நித்யோ வந்த்யோ ந வாநித்ய: கர்மவச்யோ முமுக்ஷுபி: - எம்பெருமானின் பரிவாரங்கள் ஆப்தர் மற்றும் அநாப்தர் என்று இருவகைப்படுவர். ஆப்தர் என்பவர் நித்யர், முக்தர் மற்றும் பாகவதர்கள். அநாப்தர் என்பவர் தேவர்களும், கர்ம வசப்பட்ட ஸம்ஸாரிகளும் ஆவர். முமுக்ஷு ஒருவன் முதலில் கூறியவர்களை வணங்கலாம், இரண்டாவதாகக் கூறப்பட்டவர்களை வணங்கக்கூடாது.

ஆகவே பதிவ்ரதைக்கான தர்மங்களுடன் கூடிய ஒருவன், எம்பெருமானிடம் மிகவும் ஈடுபாடு கொண்ட ஒருவன், எம்பெருமானின் ஸங்கல்பத்திற்கு உட்பட்டே நடக்க முயல்வான். பாகவதர்களுக்கு அடிமையாக இருத்தல் என்பது நாம் எம்பெருமானுக்கு மட்டுமே அடிமை என்ற ஞானத்தால் உண்டாவதாகும். மற்ற யாருக்கும் நாம் அடிமை அல்ல என்பதால், பாகவதர்களுக்குத் தொண்டு செய்தல் என்பது முறையானதே ஆகும்.

**மூலம்** – இப்பாகவத சேஷத்வம் ஸ்வாபாவிகமோ ஔபாவிகமோவென்னில், கர்மாத்யுபாதிகளற நித்யாபிவாச்சித பரஸ்பர நீசபாவை: என்கிறபடியே யாவதாத்மபாவியாய்க்கொண்டு முக்ததசையிலும் அநுவர்த்திப்பதொன்றா கையாலே ஸ்வாபாவிகமென்னவுமாம்; பகவத்ஸம்பந்த ஜ்ஞாநவிசேஷ நிபந்தநமாகையாலே ஔபாவிகமென்னவுமாம்.

**விளக்கம்** – இப்படியாக பாகவதர்களுக்குத் தொண்டு புரிந்தபடி இருத்தல் என்பது இயற்கையாகவே உண்டாகிறதா அல்லது எதிர்பாராமல் உண்டாகிறதா என்ற கேள்வி எழலாம். இரண்டு வகைகளிலும் உண்டாகிறது. ஸ்ரீவைகுண்டஸ்தவம்

(77) - நித்யாபிவாச்சித பரஸ்பர நீசபாவை: - ஒருவருக்கொருவர் தொண்டு செய்தபடி இருக்க விரும்பும் நித்யஸூரிகளோடு நான் எப்போது சேர்வேன் – என்று கூறுவதற்கு ஏற்ப இத்தகைய பாகவத சேஷத்வம் என்பது முக்தி அடைந்த பின்னரும் தொடர்வதால் இது இயற்கையாகவே உள்ளதாகிறது. எம்பெருமானின் தொடர்பு பற்றிய ஞானம் உண்டாகும்போது இத்தகைய பாகவத சேஷத்வமும் உண்டாவதால் எதிர்பாராமல் உண்டாகிறது எனவும் கூறலாம்.

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீரங்கநாச்சியார் ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி பிள்ளை லோகாசார்யர் அருளிச் செய்த

# ஸ்ரீவசனபூஷணம்

இதற்கு ஸ்வாமி மணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம்
(பகுதி – 13)

11. இருவரையும் திருத்துவதும் உபதேசத்தாலே.

**அவதாரிகை** – இருவரையும் திருத்துவதெவ்வழியாலேயென்னுமாகாங்க்ஷையிலே அருளிச்செய்கிறார் (இருவரையுமென்று தொடங்கி).

**விளக்கம்** - இருவரையும் (ஈச்வரன், ஜீவன்) எவ்விதம் திருத்துகிறாள் என்பதை இங்கு அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - ஈச்வரனைத் திருத்துவது இச்சேதநனுடைய அபராதங்களைக் கணக்கிட்டு நீரிப்படி தள்ளிக் கதவடைத்தால் இவனுக்கு வேறொரு புகலுண்டோ, உமக்குமிவனுக்கு முண்டான பந்தவிசேஷத்தைப் பார்த்தால் உறவேல் நமக்கிங்கொழிக்கவொழியாது என்கிறபடியே குடநீர் வழித்தாலும் போகாததொன் றன்றோ, ஸ்வம்மானவிவனை லபிக்கை ஸ்வாமியானவும்முடைய பேறாயன்றோ விருப்பது, எதிர் சூழல்புக்குத் திரிகிற வுமக்கு நான் சொல்லவேணுமோ, ரக்ஷணாஸாபேக்ஷனாய் வந்துவிவனை ரக்ஷியாதபோது உம்முடைய ஸர்வரக்ஷகத்வம் விகலமாகாதோ? அநாதிகாலம் நம்முடைய ஆஜ்ஞாதிலங்கநம் பண்ணி நம்முடைய சீற்றத்துக்கிலக்காய்ப் போந்தவிவனை அபராதோசித தண்டம் பண்ணாதே அத்தைப்பொறுத்து அங்கீகரித்தால் சாஸ்த்ர மர்யாதை குலையாதோவென்றன்றோ திருவுள்ளத்திலோடுகிறது, இவனை ரக்ஷியாதே அபராதாநுகுணமாக நியமித்தால் உம்முடைய க்ருபாதி குணங்கள் ஜீவிக்கும்படியென்? அவை ஜீவித்ததாவது இவனை ரக்ஷித்தாலன்றோ, நியமியாதபோது சாஸ்த்ரம் ஜீவியாது, ரக்ஷியாதபோது க்ருபாதிகள் ஜீவியாது, என் செய்வோமென்ன வேண்டா, சாஸ்த்ரத்தை விமுகர் விஷயமாக்கி க்ருபாதிகளை அபிமுகர் விஷயமாக்கினால் இரண்டும் ஜீவிக்கும், ஆனபின்பிவனை

ரக்ஷித்தருளீரென்னுமுபதேசத்தாலே. இவ்வுபதேச க்ரமம் இவர் தாமருளிச்செய்த பரந்தபடியிலும், ஆச்சான் பிள்ளையருளிச்செய்த பரந்த ரஹஸ்யத்திலும் விஸ்தரேண காணலாம். பிதேவ த்வத் ப்ரேயத் ஜநநி பரிபூர்ணாகஸி ஜநே ஹித ஸ்ரோதோ வ்ருத்த்யா பவதிச கதாசித் கலுஷதீ: கிமேதந் நிர்தோஷ: க இஹ ஜகதீதி த்வமுசிதைருபாயைர் விஸ்மார்ய ஸ்வஜநயஸி மாதா ததஸி ந: என்று, அபராத பரிபூர்ண சேதந விஷயமாக ஹிதபரனான ஸர்வேச்வரன் திருவுள்ளம் சீறும்படியையும், அத்தசையில் இச்சீற்றத்துக்கடியென்னென்பது - இவன் தீரக்கழியச்செய்தவபராத மென்றவன் சொன்னால் மணற்சோற்றிலே கல்லாராய்வாருண்டோ? இந்த ஜகத்தில் அபராதமற்றிருப்பாரார்? என்பதாய், உசிதோபாயங்களாலே, அபராதங்களை மறப்பித்து, பிராட்டி சேர்த்தருளும்படியையும் அருளிச்செய்கையாலே, உபதேசத்தாலே ஈச்வரனைத் திருத்தும்படி ஸங்கரஹேண பட்டரும் அருளிச்செய்தாரிறே. அவதார தசையிலேயும் ப்ராணஸம்சயமாபந்நம் த்ருஷ்ட்வா ஸீதாத வாயஸம், த்ராஹி த்ராஹீதி பர்த்தாரமுவாச தயயா விபும் என்று வாசாமகோசரமான மஹாபாரதத்தைப் பண்ணின காகத்தைத் தலையறுப்பதாக விட்ட ப்ரஹ்மாஸ்த்ரத்துக்கொரு கண்ணழிவு கற்பித்துப் பெருமாள் ரக்ஷித்தருளிற்றும் இவளுபதேசத்தாலேயென்னுமிடம், பாத்ம புராணத்திலே சொல்லப்பட்டதிறே. இனி சேதநனைத் திருத்துவது, உன்னபராதத்தின் கனத்தைப் பார்த்தால் உனக்கோரிடத்தில் காலூன்றவிடமில்லை, ஈச்வரனாவான் நிரங்குச ஸ்வதந்த்ரனாகையாலே அபராதங்களைப் பத்தும் பத்தாகக் கணக்கிட்டு அறுத்தறுத்துத் தீத்தாநிற்கும். இவ்வநர்த்தத்தைத் தப்பவேண்டில் அவன் திருவடிகளிலே தலை சாய்க்கையொழிய வேறொரு வழியில்லை. அபராத பரிபூர்ணனானவென்னை யவனங்கீகரிக்குமோ தண்டியானோவென்று அஞ்சவேண்டா. ஆபிமுக்க்யமாத்தரத்திலே அகிலாபராதங்களையும் பொறுக்கைக்கும் போக்யமாகக் கொள்ளுகைக்கும் ஈடான குணங்களாலே புஷ்கலனென்று லோகப்ரஸித்தனாயிருப்பானொருவன். ஆனபின்பு நீ ஸுகமேயிருக்க வேணுமாகிலவனை ஆச்ரயிக்கப் பார் - என்றும் பரம ஹிதோபதேசத்தாலே; அப்படி எங்கே கண்டோமென்னில், பாபிஷ்டனாய் வழிகெட நடந்து திரிகிற ராவணனைக் குறித்து மித்ர மௌபயிகம் கர்த்தும் ராம: ஸ்தாநம் பரீப்ஸதா வதஞ்சா நிச்சதா கோரம் த்வயாஸௌ புருஷர்ஷப: விதிதஸ் ஸஹி தர்மஜ்ஞச் சரணாகத வத்ஸல: தேந மைத்ரீ பவது தே யதி ஜீவிது மிச்சஸி என்று பெருமாளோடே உறவு பண்ணுகைகாணுனக்கு ப்ராப்தம், அது செய்யப் பார்த்திலையாகில் வழியடிப்பார்க்கும் தரையில் கால் பாவி நின்று வழியடிக்கவேணுமே, உனக்கோரிருப்பிடம் வேண்டிருந்தாயாகிலும் அவரைப் பற்றவேணும். அவரதல்லாததோரு ஸ்தலமில்லை காண், எளிமையாக எதிரிகாலிலே குனிந்து இவ்விருப்பிருப்பதிற்காட்டில் பட்டுப்போக வமையுமென்றிருந்தாயோ, உன்னை சித்ரவதம் பண்ணாமல் நற்கொலையாகக் கொல்லும் போதுமவரைப் பற்ற வேணுங்காண், நான் பண்ணின அபராதத்துக்கு என்னையவர் கைக்கொள்வரோவென்றிருக்கவேண்டா, ஆபிமுக்க்யம் பண்ணினால் முன்பு செய்தவபராதத்தைப் பார்த்துச்சீறுமந்த புன்மையவர்

பக்கலில்லை காண், அவர் புருஷோத்தமர் காண், சரணாகதி பரமதர்மமென்றறியுமவராய் சரணாகததோஷம் பாராத வத்ஸலராக வெல்லாரும் அறியும்படிகாண் பெருமாளிருப்பது. நீ ஜீவிக்கவேணுமென்று இச்சித்தாயாகில் அவரோடுனக்குறவு உண்டாகவேணுமென்று இப்படியச்சமுறுத்தி யுபதேசித்தாளிறே; அவன் திருந்தாதொழிந்தது இவளுடைய உபதேசக்குறையன்றே, அவனுடைய பாபப்ராசுர்யமிறே. இப்படி உபயரையுமுபதேசத்தாலேமென்கையாலே ச்ரு ச்ரவணே என்கிற தாதுவிலே நிஷ்பந்நமான ஸ்ரீ சப்தத்தில் ச்ருணோதி, ச்ராவயதி என்கிற வ்யுத்பத்திகளில் வைத்துக்கொண்டு ச்ராவயதி என்கிற வ்யுத்பத்த்யர்த்தம் சொல்லப்பட்டது; ச்ராவயதி என்கிறது ஈச்வர விஷயமாகவே பூர்வர்கள் க்ரந்தங்களில் பலவற்றிலும் காணப்பட்டதாகிலும் அதவா விமுகாநாமபி பகவதாச்ரயணோபதேச: ச்ராவயித்ர்த்வம்; விதித்தஸ் ஸஹி தர்மஜ்ஞச் சரணாகத வத்ஸல: தேந மைத்ரீ பவது தே யதி ஜீவிது மிச்சஸி, இதி ராவணம் ப்ரத்யுபதேசாத் என்று தத்த்வதீபத்திலே சேதந விஷயமாகவும் ஜீயருளிச் செய்கையாலே, இவ்விடத்திலும் சேதந விஷயமாக்வும் சொல்லக் குறைவில்லை.

**விளக்கம் -** முதலில் ஈச்வரனை எவ்விதம் திருத்துகிறாள் என்று காண்போம். இவள் எம்பெருமானிடம் பின்வருமாறு கூறுகிறாள். இவனுடைய குற்றங்களை இப்படி ஆராய்ந்து பார்த்து, அவனைத் தள்ளி கதவை அடைத்தால், அவனுக்கு வேறு புகல் இடம் ஏது? உமக்கும் இவனுக்கும் உள்ள உறவுமுறை மிகவும் உன்னதமானது. திருப்பாவை (28) - உறவேல் நமக்கிங்கொழிக்கவொழியாது – என்பதற்கு ஏற்ப நீவீர் தள்ளினாலும் அது மறையாது அல்லவோ? உமது உடைமையாக உள்ள இவனை நீவிர் அடைதல் என்பது உமது எஜமானத்தன்மை மேலும் வெளிப்பட ஒரு வாய்ப்பாக உள்ளது அல்லவோ? திருவாய்மொழி (2-7-6) – எதிர்சூழல்புக்கு – என்னும்படியாக உள்ள உமக்கு நான் இவற்றை எடுத்துக் கூறுவும் வேண்டுமா? காப்பாற்ற வேண்டும் என்று உம்மிடம் வந்த இவனைக் காப்பாற்றாமல் விட்டால், “நீவிர் அனைத்தையும் காப்பவன்” என்ற பெயர் கெட்டுவிடாதோ? நீவிர் உமது எண்ணத்தில், ”எல்லையற்ற காலமாக எனது ஆணைகளை மீறி இவன் நடந்துள்ளான். எனது கோபத்திற்கு இவன் இலக்காகி உள்ளான். இவனை இவனது குற்றங்களுக்கு ஏற்பத் தண்டித்தே ஆக வேண்டும். இவனுடைய குற்றங்களை மன்னித்து இவனை ஏற்றுக்கொண்டால், சாஸ்த்ரங்களுக்கு மக்கள் வைத்துள்ள மரியாதை நீங்கிவிடும்”, என்று எண்ணுகிறீர் அல்லவா? நீவிர் இப்படியாக எண்ணி இவனைக் காப்பாற்றாமல் தண்டித்தால் உம்முடைய க்ருபை முதலான குணங்கள் அதன் பின்னர் உம்மிடம் எவ்விதம் காணப்படும்? இவனைக் காப்பாற்றினால் அல்லவோ அந்தக் குணங்கள் ஓங்கி நிற்கும்? ”இந்த ஜீவனைக் (தவறு செய்தவன்) காப்பாற்றினால் எனது கருணை முதலான குணங்கள் பிழைக்கும், இவனைக் காப்பற்றாமல் தண்டித்தால் மட்டுமே சாஸ்த்ரங்கள் பிழைக்கும். ஆக என்ன செய்வது?”, என்று நீவிர் சிந்திக்கவேண்டாம். உம்மிடமே ஈடுபாடு இல்லாதவர்கள் விஷயத்தில் சாஸ்த்ரங்களின்படி நடந்துகொண்டு,

ஈடுபாடு உள்ளவர்களிடம் கருணை முதலான குணங்களைக் காண்பித்து நடக்கலாமே! இதனால் இரண்டுமே பிழைத்துவிடும் அல்லவோ? ஆகவே இவனை நீவிர் காப்பீராக - என்று எம்பெருமானை உபதேசம் மூலமாகத் திருத்துகிறாள்.

இத்தகைய உபதேசத்தை இவர் (ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர்) அருளிச்செய்த பரந்தபடியிலும், ஸ்வாமி ஆச்சான்பிள்ளை அருளிச்செய்த பரந்த ரஹஸ்யத்திலும் மிகவும் விரிவாகக் காணலாம். இதே கருத்தை ஸ்வாமி பராசரபட்டர் எவ்விதம் அருளிச்செய்தார் எனக் காண்போம். கீழே உள்ள ஸ்ரீகுணரத்னகோஸத்தின் வரிகளைக் காண்க (52):

> பிதா இவ த்வத் ப்ரேயாந் ஜநநி பரிபூர்ணாகஸி ஜநே
> ஹித ஸ்ரோதோ வ்ருத்யா பவதி ச கதாசித் கலுஷ தீ:
> கிம் ஏதத் நிர்தோஷ: க இஹ ஜகதி இதி த்வம் உசிதை:
> உபாயை: விஸ்மார்ய ஸ்வஜநயஸி மாதா தத் அஸி ந:

இதன் பொருள் - அனைவருக்கும் தாயாக இருப்பவளே! ஸ்ரீரங்கநாயகீ! உனது அன்புக் கணவனான ஸ்ரீரங்கநாதன், குற்றங்கள் புரிகின்ற இந்த உலகில் உள்ள மக்களிடம், அவர்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு, ஒரு தகப்பன் போல், அவர்கள் மீது கோபம் கொள்வான். அது போன்ற நேரங்களில் நீ அவனிடம், "என்ன செயல் நீங்கள் புரிகிறீர்கள்? இந்த உலகத்தில் குற்றம் செய்யாதவர் யார்?", என்று இதமாகப் பேசுகிறாய். இதன் மூலம் அவன் எங்கள் குற்றங்களை மறக்கும்படிச் செய்கிறாய். இதன் காரணமாக எங்கள் தாய் ஸ்தானத்தில் நீயே உள்ளாய் – என்பதாகும்.

இதன் மூலம் நன்மையை மட்டுமே எண்ணுகின்ற ஸர்வேச்வரன் குற்றங்கள் செய்யும் ஜீவன் விஷயத்தில் எவ்விதம் கோபம் கொள்கிறான் என்றும், அந்தச் சீற்றத்தின் காரணம் எம்பெருமான், "இந்த ஜீவன் இத்தகைய அபராதம் செய்தான்", என்று கூறக்கூடும் என்றும் உணர்த்தினார். ஈச்வரனின் சொற்களைக் கேட்ட பிராட்டி, "மணற்சோற்றில் கல் உள்ளதா என்று யாரேனும் ஆராய்ச்சி செய்வார்களா? இந்த உலகத்தில் தவறு செய்யாத மனிதர்கள் யாரேனும் உள்ளனரா?", என்று தனது சாமர்த்தியமான உபாயங்கள் மூலம் ஜீவன் செய்யும் குற்றங்களை மறக்கும்படிச் செய்கிறாள். இப்படியாக ஜீவனை எம்பெருமானுடன் சேர்த்து வைக்க பிராட்டி செய்யும் செயல்களை பட்டர் அருளிச்செய்கிறார். இதன் மூலம் உபதேசங்கள் வாயிலாக ஈச்வரனை எவ்விதம் பிராட்டி திருத்துகிறாள் என்பதைச் சுருக்கமாக பட்டர் அருளிச்செய்தார்.

அவன் இராமனாக அவதரித்தபோது - ப்ராணஸம்சயமாபந்நம் த்ருஷ்ட்வா ஸீதாத வாயஸம், த்ராஹி த்ராஹீதி பர்த்தாரமுவாச தயயா விபும் - என்று பெரிய அபராதம் செய்த காகாசுரனைத் தலையறுத்து அழித்துவிட ப்ரஹ்மாஸ்த்ரம் தொடுத்தான். அந்த அஸ்திரத்தை தடுத்து, காகத்தை இராமன் காப்பாற்றியதும் இவளது உபதேசம் மூலமே என்பதைப் பாத்ம புராணத்தில் காணலாம்.

அடுத்து ஜீவனைத் தனது உபதேசத்தின் மூலம் இவள் திருத்தும் முறையைக் காண்போம். ஜீவனிடம் இவள் கூறுவது பின்வருமாறு உள்ளது – நீ (ஜீவன்) செய்த தவறுகளைக் காணும்போது நீ பிழைக்க வேறு வழியில்லை. அனைத்திற்கும் சரியான முறையில் தண்டனை அளிப்பதில் ஸ்வதந்த்ரம் பெற்றுள்ள எம்பெருமான், உனது அபராதங்களைச் சரியாகக் கணக்கிட்டு, அந்தப் பாவங்களை நீக்கும்விதமாக தண்டனை வழங்கவே செய்வான். இந்தத் தண்டனையில் இருந்து நீ தப்பிக்கவேண்டும் என்றால், அவனது திருவடிகளில் உன் தலை சாய்த்து சரணம் அடைவதே வழியாகும். இது தவிர வேறு வழியில்லை. குற்றங்களின் மொத்த உருவமாக உள்ள என்னை அவன் காப்பாற்றுவானோ என்ற அச்சமோ, ஐயமோ உனக்கு வேண்டாம். சரணம் என்று புகுந்த மாத்திரத்தில் அனைத்து அபராதங்களையும் பொறுத்துக் கொள்பவனாகவும், இன்பமாக உள்ள அனைத்திற்கும் ஈடாக உள்ள குணங்களுக்கு இருப்பிடமாக உள்ளவனாகவும் இந்த உலகினாரால் ஸர்வேச்வரன் அறியப்படுகிறான். ஆகவே நீ சுகமாக இருப்பதற்கு அவனை அண்டி நிற்பாயாக – என்று மிகுந்த நன்மை பயக்கும்படியான உபதேசம் செய்கிறாள்.

இதனை நாம் எங்கே காணலாம் என்றால், பாவங்களை மிகுதியாகச் செய்து தவறான மார்க்கத்தில் நின்ற இராவணனிடம் சீதை கூறியதிலிருந்து அறியலாம். இராமாணம் - மித்ர மௌபயிகம் கர்த்தும் ராம: ஸ்தாநம் பரீப்ஸதா வதஞ்சா நிச்சதா கோரம் த்வயாஸௌ புருஷர்ஷப: விதிதஸ் ஸஹி தர்மஜ்ஞச் சரணாகத வத்ஸல: தேந மைத்ரீ பவது தே யதி ஜீவிது மிச்சஸி – என்று இராவணிடம் கூறுகிறாள். அதாவது, "இராமனுடன் நட்பு உறவு கொள்ளுவதே உனக்கு உயிர் பிழைக்க வழியாகும். இப்படிச் செய்யவில்லை என்றால் இந்த உலகில் உனக்குக் கால் பாவக் கூட இடம் இல்லாது போகும். உனக்கு ஓர் இடம் வேண்டும் என்று எண்ணினால் இராமனைப் பற்றுவாயாக. அவனைத் தவிர வேறு புகலிடம் உனக்கு இல்லை. மிகவும் எளிமையான உபாயமாக உன் எதிரியாக நீ நினைக்கின்ற இராமனின் திருவடிகளில் விழுவதைக் காட்டிலும், மடிந்து போக உனக்கு விருப்பமோ? நீ செய்த தவறுகளுக்கு உன்னைச் சித்ரவதை செய்து சொல்லாமல், சட்டெனக் கொல்ல முயன்றாலும் நீ இராமனையே பற்ற வேண்டும். நான் (இராவணன்) செய்த தவறுகளுக்கு இராமன் என்னை மன்னிப்பானா என்று நீ எண்ண வேண்டாம். சரணம் என்று புகுந்தவன் விஷயத்தில் முன்பு செய்த

தவறுகளை எண்ணிப் பார்த்து சீறுகின்ற தாழ்ந்த தன்மை இராமனுக்கு இல்லை. அவன் புருஷர்களில் உத்தமன் (உயர்ந்தவன்) ஆவான். சரணாகதி என்பதே மிகவும் உயர்ந்த தர்மம் என்பதையும், சரணம் என்று புகுந்தவனின் குற்றங்களைத் தாய் போன்று வாத்ஸல்யத்துடன் மன்னிக்கும் தன்மை கொண்டவன் என்பதையும் இராமன் அறிவான் என்று அல்லவோ உலகம் இராமனைக் கொண்டாடுகிறது? இப்படியாக அல்லவோ இராமன் உள்ளான்? உயிர் வாழவேண்டும் என்று நீ ஆசை கொண்டால், அவனுடன் நட்பு முறையில் உனக்கு உறவு இருத்தல் வேண்டும் - என்று இராவணனைச் சற்றே அச்சுறுத்தி இவள் உபதேசித்தாள் அல்லவா? இத்தனை உபதேசத்திற்குப் பின்னரும் இராவணன் திருந்தாமல் நின்றதன் காரணம் சீதையின் உபதேசங்களில் உள்ள குறைகளால் அல்ல, அவனது பாபங்களின் மிகுதியால் ஆகும்.

இப்படியாக இவள் இருவரையும் திருத்துகிறாள் என்பதால் ச்ரு ச்ரவணே என்பதில் தோன்றிய "ஸ்ரீ" என்ற சொல்லில் ச்ருணோதி (கேட்கிறாள்), ச்ராவயதி (கேட்கும்படிச் செய்கிறாள்) என்ற இரண்டும் உள்ளது. இதில் ச்ராவயதி என்பது இதுவரை கூறப்பட்டது. ச்ராவயதி என்ற இது "ஈச்வரனைக் கேட்க வைக்கிறாள்" என்னும்படி ஈச்வர விஷயமாகவே உள்ளது எனப் பூர்வார்சார்யர்கள் நூல்களில் உள்ளது. ஆனால் வாதிகேஸரி அழகியமணவாளஜீயர் தனது தத்வதீபத்தில் இதனைச் சேதந விஷயத்தில் பின்வருமாறு காண்பிக்கிறார் – அதவா விமுகாநாமபி பகவதாச்ரயணோபதேச: ச்ராவயித்ர்த்வம்; விதித்தஸ் ஸஹி தர்மஜ்ஞச் சரணாகத வத்ஸல: தேந மைத்ரீ பவது தே யதி ஜீவிது மிச்சஸி, இதி ராவணம் ப்ரத்யுபதேசாத் - எம்பெருமானிடம் பற்றுதல் இல்லை என்றாலும் எம்பெருமானைப் பற்றிய உபதேசத்தை அவர்களும் கேட்கும்படி செய்வித்தல் ; விதித இச்சஸி - என்று இராவணனைக் குறித்து உபதேசித்தாள் – என்றது காண்க. ஆகவே ச்ராவயதி என்பது ஜீவனையும் கேட்கும்படிச் செய்வதையும் குறிக்கும் எனலாம்.

12. உபதேசத்தாலேயிருவருடையவும் கர்ம பாரதந்த்ர்யம் குலையும்.

**அவதாரிகை** - இவ்வுபதேசத்தாலிரண்டு தலையிலும் பலிக்குமதேதென்னவருளிச் செய்கிறார் உபதேசத்தாலே என்று தொடங்கி.

**விளக்கம்** - இவளது இந்தச் செய்கை மூலமாக இரண்டு இடங்களிலும் (எம்பெருமான், சேதனன்) என்ன நிகழ்கிறது என்பதற்கான விடையை அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் - அதாவது எப்படி இரண்டு தலைக்கும் தத்ததநுகுணமாகவிவள் பண்ணுமுபதேசத்தாலே புண்யபாபங்களின் வசத்திலே இழுப்புண்டு பகவத்

விமுகனாய்த் திரிகையாகிற சேதநனுடைய கர்ம பாரதந்த்ர்யமும், இவன் பண்ணின கர்மத்தை ப்ரதாநமாக்கி அதுக்கீடாகவே செய்வனித்தனையென்று இவனுடைய ரக்ஷணத்தில் விமுகனாயிருக்கையாகிற ஈச்வரனுடைய கர்மபாரதந்த்ர்யமும் நிவ்ருத்தமாமென்கை. சேதநனுடய கர்ம பாரத்தந்த்ர்யம் அநாத் யசித் ஸம்பந்த கார்யமான அவித்யா நிபந்தநம், ஈச்வரனுடைய கர்மபாரதந்த்ர்யம் நிரங்குச ஸ்வாதந்த்ர்ய கார்யமான ஸ்வஸங்கல்ப நிபந்தநம்; இவை இரண்டும் அநாதி ஸித்தமாய்ப் போந்ததேயாகிலும், மாத்ருத்வ ஸம்பந்தத்தாலே சேதநனுக்காப்தையாய், மஹிஷீத்வ ஸம்பந்தத்தாலே ஈச்வரனுக்கபி மதையுமானவிவள், இரண்டு தலையும் நெஞ்சிளகி ஆச்ரயணாங்கீகாராபிமுகமாம் படியாகப் பண்ணுமுபதேசத்தாலே நிவ்ருத்தமாகத் தட்டில்லை.

**விளக்கம் -** இவள் இரண்டு இடங்களிலும் அவரவர்களுக்கு ஏற்றபடி உபதேசம் செய்கிறாள். இதனால் இரண்டு வினைகளின் காரணமாக, அந்த வினைப்பயன்கள் இழுக்கும் திசைகளில் திரிந்தபடியும், எம்பெருமானிடம் எந்தவிதமான ஈடுபாடும் இல்லாமல் உள்ளபடியும் காணப்படும் சேதனைனின் கர்ம பாரதந்த்ர்யம் அழிந்துவிடும் (கர்ம வசப்பட்டிருந்தல் என்று நிலை மாறும்). சேதனர்கள் செய்கின்ற பாவங்களை அவன் முன்பாக நிறுத்த, இவர்கள் செய்த பாவத்திற்குத் தக்கபடியே நான் இருப்பேன் என்றும், அவர்களைக் காப்பாற்றுவதில் எந்தவிதமான ஈடுபாடும் எடுக்கமாட்டேன் என்றும் இருக்கின்ற ஈச்வரனின் கர்ம பாரதந்த்ர்யம் அழிந்துவிடும். சேதனனின் கர்ம பாரதந்த்ர்யம் என்பது ஏன் உண்டானது என்றால் – எல்லையற்ற காலமாக ப்ரக்ருதியின் தொடர்பினால் உண்டான அவித்யையின் விளைவால் ஆகும். ஈச்வரனுக்குக் கர்ம பாரதந்தர்யம் என்பது ஏன் உண்டானது என்றால் – வேறு எதனாலும் தடைபடாத ஸ்வதந்த்ரமான தனது ஸங்கல்பத்தினால் ஆகும்.

இவை இரண்டும் எல்லையற்ற காலமாக உள்ளபோதிலும் இவளுடைய உபதேசம் மூலம் எவ்விதம் மாறும் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார். இவள் சேதனர்களுக்குத் தாய் என்ற ஸம்பந்தம் காரணமாக அவர்களது நம்பிக்கையைப் பெறுகிறாள். பத்தினி என்பதால் எம்பெருமானால் மிகவும் விரும்பப்படுகிறாள். இதன் மூலம் சேதனர்கள் தங்கள் மனம் உருகி எம்பெருமானைப் பற்றுவதில் ருசி கொண்டவர்களாகவும், எம்பெருமான் மனது உருகிச் சேதனர்களைக் காப்பாற்றுவதில் ருசி கொண்டவனாகவும் மாற்றுகிறாள். இப்படியாக இருவரது கர்ம பாரதந்த்ர்யம் அழிந்துவிடுகிறது.

ஸ்வாமி பிள்ளை லோகாசார்யர் திருவடிகளே சரணம்
ஸ்வாமி மணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்

.......தொடரும்

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமானுஜாய நம:

ஶ்ரீரங்கநாயகி ஸமேத ஶ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

# திருவாய்மொழி

## இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம் மூலமும், எளிய தமிழ்நடையும்

(பகுதி – 22)

**வ்யாக்யானம் -** இப்படி ஸர்வத்தையும் உடையனாய், தான் போகத்திலே அந்யபரனாய்க் கோயிற்சாந்து பூசி, நித்ய விபூதியிலே இருக்குமோவென்னில்; (புலனொடு) இவை பட்டத்தைத் தானும் பட்டு உடன்கேடனாய் நின்று நோக்கும் என்கிறது, “புலன்” என்கிறது – புலப்படும் பதார்த்தங்களை. த்ருச்யதே ச்ரூயதேபி வா என்கிறபடியே ப்ரமாண கோசரங்களான பதார்த்தங்களை (ஓடு) தத்ஸ்ருஷ்ட்வா என்கிறபடியே இவற்றை உண்டாக்கி, ஜீவத்வாரா அநுப்ரவேஶித்து, பின்னை இவற்றுக்கு வஸ்துத்வ நாமபாக்த்வங்களுண்டாம்படி பண்ணி, அந்த:ப்ரவிஷ்டச் சாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா என்கிறபடியே ஸர்வாந்தராத்மாவாய் நிற்கும்படியைச் சொல்லுகிறது. ஆனால், பின்னை தான் ஸர்வாத்மாவாய் நின்றால் அசித்தினுடைய பரிணாமாதிகளாதல், சேதநருடைய ஸுகித்வ து:க்கித்வங்களாதல், தனக்கு ஸ்பர்சிக்கும்படி இருக்குமோ? என்னில் (புலனலன்) தந்தர்மாவல்லன். த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்வத்த்யநச்நந்நந்யோ அபிசாகசீதி என்று தான் ஒட்டற்று நின்று விளக்காநிற்கும். (ஒழிவிலன் பரந்த) ஒரு வஸ்துக்கள் ஒழியாமே இப்படி வ்யாபித்திருக்கும் என்னவுமாம். அன்றியே காலபரமாக்கி, எக்காலத்திலும் எல்லா வஸ்துக்களிலும் வ்யாபித்திருக்கும் என்னவுமாம்.

**விளக்கம் -** இப்படி அனைத்தையும் உடையவனாய், இன்பத்தில் நின்று, சந்தன சாந்து அணிந்து பரமபதத்தில் தங்கி இருப்பானோ? என்றால் (புலனொடு) - இவை அனைத்தும் அனுபவிப்பதைத் தானும் அனுபவித்து, இவற்றுக்கு உண்டாகும் அனைத்தும் தனக்கே என்று எண்ணி நிற்பான். புலன் என்றால் புலன்களுக்குப் புலப்படும் விஷயங்கள். த்ருச்யதே ச்ரூயதேபி வா - பார்க்கப்படும், கேட்கப்படும் பொருள்கள் ஆகும். (ஓடு) -இவற்றை உண்டாக்கி, அவற்றின் ஜீவன் வழியாக உள்ளே நுழைந்து, அவை பொருள்கள் என்று விளங்க வைத்து, அவைகளுக்குப்

பெயர் கொடுத்து, அந்த:ப்ரவிஷ்டச் சாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா - அனைத்து ஆத்மாக்களின் உள்ளே நுழைந்தும், அவைகளை நியமித்தும் - என்னும்படி அனைவருக்குள் ஆத்மாவாக நிற்கும்படியைக் கூறுகிறார். ஆனால் அனைத்திற்கும் ஆத்மாவாக நின்றால் அசித் போன்ற மாறுதல்களுக்கு உட்பட்டும், சேதனர்கள் போன்று இன்பதுன்பங்கள் தன்னை அடையும்படியும் இருப்பானோ என்றால், (புலனலன்) – தான் ஒட்டாமல் நிற்பவன். முண்டக உபநிஷத் - த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்வத்த்யநச்நந்நந்யோ அபிசாகசீதி - ஒரே போன்ற தன்மை கொண்ட இவற்றில் ஒன்று பழங்களை உண்டபடி இருக்கின்றது, மற்றது பார்த்தபடி உள்ளது – என்றது காண்க. (இங்கு மரம் என்பது உடல் ஆகும். ஒரு பறவை = ஜீவாத்மா, இரண்டாம் பறவை = பரமாத்மா, பழம் = பலன். ஆக ஜீவன் மட்டும் அனுபவிக்கிறான்). (ஒழிவிலன்) – எந்த வஸ்துவும் தப்பாதபடி அனைத்திலும் வ்யாபித்து நிற்கிறான் அல்லது ஒழிவின்மை என்பது காலத்துடன் சேர்த்து, எக்காலத்திலும் அனைத்து வஸ்துக்களிலும் வ்யாபித்து நிற்கிறான்.

**வ்யாக்யானம்** - (அந்நலனுடையொருவனை) - கீழ் இரண்டு பாட்டாலும் சொன்ன குண விசிஷ்ட ஸ்வரூபத்தை நினைத்து "அந்நலனுடையொருவனை" என்கிறார். (நணுகினம்) "மயர்வறமதிநலமருளினன்" என்கிற ஜ்ஞாநமாத்ரம் அன்றிக்கே கிட்டப்பெற்றோம். (நாமே) இது பொய்யோ? கிந்து ஸ்யாச்சித்தமோஹோயம், இது ஏதேனும் ப்ரமஸ்வப்நாதிகளோ என்றாப்போலே. இவர் "ஈச்வரோஹம்" என்றால் அவனுக்கும் குடிவாங்கவேண்டும்படியாயிறே இருப்பது. அஹமென்றால் அவனளவிலே பர்யவஸிக்க வேண்டும்படியாயிருக்க, தேஹத்தளவிலேயாம் படியாகவிறே முன்பு போந்தது. மந்யே ப்ராப்தாஸ்ஸ்ம தம் தேசம் பரத்வாஜோ யமப்ரவீத் - கைகேயி "ராஜந்" என்று ஸம்போதிக்கும்படி பிறந்து, ஸ்ரீபரத்வாஜபகவான் "அவள் மகனாய்க் கீழ்வயிற்றுக்கழலை அறுக்க வருகிறானோ" என்று கச்சிந்ந துஷ்டோ வ்ரஜஸி என்னும்படியான நான், அவன் சொன்ன ஆச்ரமத்திலே புகுந்தேனோ என்று சங்கியா நின்றேன் என்றானிறே. வாநராணாம் நராணாஞ்ச கதமாஸீத் ஸமாகம: "காட்டிலே வர்த்திக்கக்கடவ குரங்குகளுக்கும், நாகரீகரான சக்ரவர்த்தி பிள்ளைகளுக்கும் ஒரு சேர்த்தியுண்டானபடி எங்ஙனே?" என்ன, ராமஸுக்ரீவயோரைக்யம் தேவ்யேவம் ஸம்ஜாயத பெருமாளும் மஹாராஜரும் சேர்த்த சேர்த்தி, பின்னே பிறந்த இளையபெருமாள் நிற்க, அடியேன் அந்தப்புரகார்யத்துக்கு வரும்படியாகவிறே; நாமும் இங்ஙனே கூடிக்கொண்டு நிற்கக் கண்டேனித்தனை. (நாமே) இவ்வநுபவத்துக்குப் புறம்பான நாம், பகவத்கதாகந்தரஹித ரான நாம் (நாமே) இது பொய்யோ?

**விளக்கம்** - (அந்நலனுடையொருவனை) - கடந்த இரு பாசுரங்களில் கூறப்பட்ட குணங்களுடன் கூடிய எம்பெருமானின் ஸ்வரூபத்தை எண்ணி இவ்வாறு

கூறுகிறார். (நணுகினம்) – மயர்வற மதி நலம் அருளினன் என்ற ஞானம் மட்டுமே அல்லாமல் அவனை அடையவும் செய்தோம். (நாமே) - இது உண்மையோ பொய்யோ? இது ஏதேனும் மயக்கமோ என்று சீதை நினைத்தது போன்று இருவரும் எண்ணுகிறார். இந்த ஐயத்தின் காரணம் என்ன? அதாவது மயர்வற மதிநலம் அருளப் பெருவதற்கு முன்பு ஈச்வரோஹம் – நானே ஈச்வரன் என்னும்படியாகத் தன்னை சுதந்திரமாக எண்ணினார். ஆகையால் தனக்கு இந்தத் தகுதி உள்ளதா என்று ஐயம் கொள்கிறார். அஹம் என்றால் எம்பெருமான் அளவில் சென்று முடிய வேண்டும் அல்லாது தன்னுடைய தேகத்து அளவில் அல்லவோ முன்பு நின்றார். மந்யே ப்ராப்தாஸ்ஸ்ம தம் தேசம் பரத்வாஜோ யமப்ரவீத் – பரதன், “கைகேயி என்னை அரசனே என்று அழைக்கும்படியாகப் பிறந்து விட்டேனே! அவளது மகனாக, இருக்கும் நான் கீழ் வயிற்றில் எழுந்த கட்டி போன்று, பரதன் வருகிறானே என்று கூறும் நிலையில் உள்ள நான், பரத்வாஜரின் ஆஸ்ரமத்தை அடைந்து விட்டேனோ?”, என்று ஐயம் கொண்டான். அனுமனிடம் சீதை, ”காட்டில் வசிக்கின்ற குரங்குகளுக்கும் நகரத்தில் வசிக்கின்ற சக்ரவர்த்தியின் புத்திரர்களுக்கும் எப்படிச் சம்பந்தம் உண்டானது?,” என்றார். இதற்கு அனுமான், ”இராமனும் சுக்ரீவனும் சேர்ந்த சேர்த்தி லட்சுமணன் இருக்கும்போது நான் அந்தபுரக் கார்யத்திற்கு ஆகும்படியாக இதோ ஆயிற்றே? இந்த சேர்த்திக்கான காரணத்தை நான் அறியேன் ”, என்றான். (நாமே) - எம்பெருமானின் அனுபவத்திற்கு புறம்பான நாம்; அல்லது அவனுடைய திருநாமத்தின் வாசனையைக்கூட அறியாத நான்.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச் செய்த

# திருமாலை

(பகுதி – 46)

31. தவத்துளார் தம்மில் அல்லேன் தனம் படைத்தாரில் உள்ளேன்
உவத்தநீர் போல என்றன் உற்றவர்க்கு ஒன்றும் அல்லேன்
துவர்த்த செவ்வாயினார்க்கே துவக்கு அறத் துரிசனானேன்
அவத்தமே பிறவி தந்தாய் அரங்கமா நகருளானே

**பொருள்** – திருவரங்கத்தில் கண்வளர்பவனே! அழகியமணவாளா! தவங்கள் பல இயற்றியவர்களின் கூட்டத்தில் நான் இல்லை. மிகுந்த செல்வம் படைத்தவர்களின் கூட்டத்திலும் நான் இல்லை. உப்புத்தண்ணீர் போன்று எனது உறவினர்களுக்கு நான் எந்தவிதமான பயனும் இல்லாதவன் ஆவேன். சிவந்த உதடுகளைக் கொண்ட பெண்களுடைய உறவுகளும் அறுகும்படியான கள்வனாக உள்ளேன். இப்படியாக நான் வீணாகப் போகும்படியாக ஒரு பிறவி தந்தாயே!

**அவதாரிகை** – சாஸ்த்ரீயமாய் மோக்ஷார்த்தமான விஹிதங்களில் எனக்கு ஓர் அந்வயமில்லை என்றீர்; ஸ்வர்க்க பலார்த்தமாகவாதல், விப்ரலம்பகராய் த்ருஷ்ட பலார்த்தமாகவாதல், ஸத் கர்மாதிகளைப் பண்ணிப் போந்தீராகில் அவற்றில் உபாதிகளைப் போக்கி நன்மையில் மூட்டுகிறோம்; அவைதானுண்டோவென்னில் – அவையொன்றுமில்லை; ஸ்வப்ராப்திக்குப் பரிகரமாக தேவரீர் தந்த ஜந்மத்தை, விஷய ப்ரவணனாய் ப்ரத்வேஷத்தாலே விநாசஹேதுவாகத் தந்தீராகக் கொண்டேன் என்கிறார். ஆனால் கீழில் பாட்டோடு இதுக்கு ஸங்கதியென் என்னில்; பரஸம்ருத்த்ய ஸஹத்வமேயன்றிக்கே, விஷயாந்தர ப்ராவண்யத்தாலே என் பந்து ஜநங்களுக்கும் அசலானேன் என்கிறார்.

**விளக்கம்** – பெரியபெருமாள் ஆழ்வாரிடம், "மோக்ஷம் பெறுவதற்காக சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட உபாயங்களின் ஒன்றுகூட உம்மிடம் இல்லை என்கிறீர். போகட்டும். ஸ்வர்க்கத்தை அடைதல், பணம் பறித்தல் போன்றவற்றுக்காக வேதங்களில் கூறப்படும் யாகங்களையாவது நீவிர் இயற்றியிருந்தால் கூறுங்கள். அவற்றில் நிற்கும் உம்முடைய எண்ணத்தை மாற்றி, நீவிர் மோக்ஷம் அடையும் நன்மைகளை நான் செய்கிறேன். அப்படி ஏதாவது

உண்டா?", என்றான். இதற்கு ஆழ்வார், "அப்படி ஏதும் இல்லை. உன்னை அடைவதற்காக நீ இந்தப் பிறவியை அளித்தாய். ஆனால் நானோ இதனை உலக விஷயங்களில் ஈடுபடுத்தி, அனைவரிடமும் வெறுப்பைக் காட்டியபடி வாழ்கிறேன், ஆக நீ தந்த இந்தப் பிறவி அழிவதற்கே அளித்ததாக எண்ணி வாழ்கிறேன்", என்றார். கடந்த பாசுரத்திற்கும் இதற்கும் என்ன தொடர்பு உள்ளது? கடந்த பாசுரத்தில் மற்றவர்கள் அடைகின்ற பெருமையைப் பொறுக்க இயலாதவன் என்றார், இங்கு உலகவிஷயங்களில் ஈடுபட்டபடி உள்ளதால் உறவினர்களுக்கும் ஆகாதவனாகிவிட்டதாகக் கூறுகிறார்.

**வ்யாக்யானம்** – (தவத்துளார் தம்மிலேன்) – யஜ்ஞேந தாநேந தபஸா அநாசகேந என்று தபஸ்ஸை மோக்ஷார்த்தமாக விதித்ததிறே. முமுக்ஷுக்களாய்த் தபஸ்ஸை அநுஷ்டித்தாரில் கூட்டாகப் பெறாமையன்றிக்கே ஸ்வர்க்காதி ப்ரயோஜநாந்தரபரராய் அதுதன்னையே பேணுவாருமுண்டு; அவர்களுக்கும் கூட்டாகப் பெற்றிலேன். இவை இத்தனையிமின்றியிலே ஒழிந்தால் ஒரு தபஸ்ஸை ஆரம்பித்து அதில் வைகல்யத்தாலே ப்ராயச்சித்திகளானார் தங்களில்தான் கூடப்பெற்றேனோ? ஆக, தபஸ்ஸ்பர்சமுடையார் ஒருவரிலும் கூடப்பெற்றிலேன் என்கிறார். (தனம் படைத்தாரிலல்லேன்) – அர்த்த லாபத்தையும் புருஷார்த்த ஸாதநமாகச் சொல்லக் கடவது விலக்ஷண விஷயத்தில் வ்யவிக்குமன்று. யஜ்ஞேந தாநேந என்றும், யஜ்ஞோ தாநம் தபச்சைவ பாவநாநி என்றும், தத்தாநம் ஸாத்விகம் ஸ்ம்ருதம் என்றும் சொல்லக்கடவதிறே. யயாகயாச விதயா பஹ்வந்நம் ப்ராப்நுயாத் என்று ஸத் விஷயத்திலே வ்யவிக்குமன்று த்ரவ்யார்ஜநத்துக்கு ப்ரகார நியதியில்லை என்றும் சொல்லிற்றிறே. இம்முகத்தாலே த்ரவ்யார்ஜநம் பண்ணுவாரில் கூட்டல்லேன். திருமங்கையாழ்வார் போல்வார் அநுஷ்டிப்பதும் செய்தார்களிறே. இவையின்றிக்கேயொழிந்தாலும், யத்து ப்ரத்யுபகாரார்த்தம் பலமுத்திச்ய வா புந: என்கிற ராஜஸ தாநமாதல், அஸத்க்ருதமவஜ்ஞாதம் என்கிற தாமஸ தாநமாதல், க்யாத்யர்த்த தாநமாதல் இவை உண்டோவென்னில், அவையொன்றுமில்லை என்கிறார். இவை இரண்டும் இல்லாதாரும் பந்துக்களுக்குறுப்பாய் இருப்பர்களிறே, அதிருந்தபடியென்னென்னில் (உவத்தநீர் போல என்றனுற்றவர்க்கொன்றுமல்லேன்) – உவர்நீரை முகத்திலே ஏறிட்டுக்கொண்டால் அது கண்விழிக்கவொண்ணாதபடி கரிக்குமாபோலே, என்னை நேர்முகம் பார்க்கவொண்ணாதபடியாய்த்து நான் அவர்கள் திறத்தில் வர்த்தித்தபடி. அவர்ஜநீய பந்துக்கள் என் முகத்தே விழித்தால் அற்றைக்கு ஜீவிக்கமாட்டாதபடியாய்த்து அவர்களுக்கு அவத்யபூதனாய் வர்த்தித்தபடி. அவர்களுக்கு அப்ரியமே பண்ணுகையாலே ப்ரியவிஷயமாகவும் பெற்றிலேன். அவர்களுக்கு அஹிதமெண்ணுகையாலே ஹிதைஷியாகவும் பெற்றிலேன். எனக்கும் அநர்த்தங்களை விளைத்துக்கொள்ளுகையாலே தனக்குத் தானுளன் என்னுமளவும் பெற்றிலேன். அவர்களுக்கு அவத்யபூதனாயே போனேன்.

**விளக்கம்** - (தவத்துளார் தம்மிலேன்) – ப்ருஹத் உபநிஷத் - யஜ்ஞேந தாநேந தபஸா அநாசகேந – பரமாத்மாவை யஜ்ஞம், தானம், தவம் போன்றவை மூலம் காண விரும்புகிறனர் – என்று மோக்ஷ உபாயமாகவே தவத்தை வேதங்கள் முழங்கின. மோக்ஷத்தை விரும்பித் தவம் செய்பவர்களின் கூட்டத்தில் சேராமல் உள்ளதோடு, ஸ்வர்க்கம் உள்ளிட்ட பலன்களை விரும்பித் தவம் செய்பவர்களின் கூட்டத்திலும் சேராமல் உள்ளேன். இது மட்டும் அல்ல. ஏதோ ஒரு தவம் செய்யத் தொடங்கி, அது தடைபட்டதன் காரணமாக ப்ராயச்சித்தம் செய்தபடி உள்ளவர்களின் கூட்டத்திலும் சேராமல் உள்ளேன். ஆக எந்தவிதமான தவங்கள் இயற்றுபவர்களாக இருந்தாலும் அவர்களுடன் சேராமல் உள்ளேன் என்கிறார். (தனம் படைத்தாரிலல்லேன்) – நல்ல விஷயத்திற்காகப் பணத்தைச் செலவிடும்போது, அந்தப் பணத்தை லௌகீகமாகக் கூறாமல், புருஷார்த்த ஸாதனமாகக் கூறுவர். இதனைக் கீழே உள்ள பல வரிகளில் காணலாம்:

- ப்ருஹத் உபநிஷத் - யஜ்ஞேந தாநேந – யஜ்ஞத்தாலும், தானத்தாலும்
- கீதை (18-5) - யஜ்ஞோ தாநம் தபச்சைவ பாவநாநி – யஜ்ஞமும், தானமும், தவமும் தூய்மைப்படுத்தவல்லவை
- கீதை (17-20) - தத்தாநம் ஸாத்விகம் ஸ்ம்ருதம் – அந்த தானம் ஸாத்விகம் எனப்படுகிறது

தைத்திரீய உபநிஷத் - யயாகயாச விதயா பஹ்வந்நம் ப்ராப்நுயாத் – ஏதோ ஒரு வழியில் அதிகமாக ஈட்டக்கடவன் – என்று, நல்ல விஷயங்களுக்காகச் செலவிடும் பணத்தைத் தவறான வழிகளிலும் ஈட்டலாம் என்றது. இப்படியாகப் பணத்தை ஈட்டுபவர்களின் கூட்டத்திலும் நான் இல்லை. திருமங்கையாழ்வார் போன்றோர் இப்படி அல்லவோ செய்தனர்? இப்படியாக தவம் மற்றும் தானம் ஆகிய இரண்டும் இல்லை என்றாலும்: கீதை (17-21) - யத்து ப்ரத்யுபகாரார்த்தம் பலமுத்திச்ய வா புந: - பிரதி உபகாரத்தை எதிர்பார்த்தும், பலனை எதிர்பார்த்தும் அளிக்கப்படுகிறது – என்னும்படியான ராஜஸ தானம் அல்லது கீதை (17-22) – அஸத்க்ருதமவஜ்ஞாதம் – அஸத் பாத்ரங்களுக்கு அளிக்கப்படும் தானம் – என்னும்படியான தாமஸ தானம் அல்லது "இவர் பெரிய வள்ளல்" என்று பெயர் பெறுவதற்காகச் செய்யப்படும் தானம் ஆகிய இவையாவது உண்டா என்றால், அவையும் தம்மிடம் இல்லை என்கிறார்.

இவை இரண்டும் இல்லை என்றால், உறவினர்களுக்கு உதவியாகவாவது ஒரு சிலர் இருப்பார்கள். அப்படியாவது உண்டா என்றால் இல்லை என்கிறார். (உவத்தநீர் போல என்றனுற்றவர்க்கொன்றுமல்லேன்) – உப்புநீரை எடுத்து முகம்

கழுவினால், அது கண்களைத் திறக்கவிடாமல் செய்வது போன்று, எனது உறவினர்கள் என்னை நேருக்குநேர் காண இயலாதபடியாக அவர்களுக்கு குற்றமே செய்தபடி வாழ்ந்தேன். இதனையும் மீறி எந்த உறவினராவது என்னைப் பார்த்துவிட்டால், அவர்கள் அன்றைய தினம் நிம்மதியாக வாழஇயலாதபடி அவர்களுக்குத் தீமை செய்தபடி உள்ளேன். அவர்களுக்குப் பிடிக்காத விஷயங்களை மட்டுமே நான் செய்தபடி உள்ளதால், அவர்களின் ப்ரியத்திற்கும் ஆளாகவில்லை. அவர்களுக்குத் தீமைகளைச் சரியான திட்டம் போட்டுச் செய்தேன். எனக்கும் நான் தீமைகளையே செய்துகொண்டதால் என் ஒருவனுக்காவது நான் உறவினனாக உள்ளேனோ என்றால், அதுவும் இல்லை. அவர்களுக்கு உதவாதவனாக ஆனேன்.

**வ்யாக்யானம்** – பந்துக்களுக்கு ஆகாதவர்களும் தந்தாமுக்கு அபிமதைகளான ஸ்த்ரீகளுக்கு ஆயிருப்பார்களே, அது இருந்தபடியென், என்னில் (துவர்த்த இத்யாதி) – அகவாயில் அநாத்ம குணங்களை மறைத்து அதரத்தின் பழுப்பைக்காட்டி அகப்படுத்திக் கொள்ளுமவர்களாய்த்து; இவனும் உள்வாயில் தண்மையறியான்; தன்னோடு அவர்களுக்கொரு பந்தமில்லாமையுமறியான்; இவனும் அவ்வதரத்தின் பழுப்புக்கு அவ்வருகுபோகமாட்டாதே அகப்படுமாய்த்து; அகவாயில் அநாத்ம குணங்களை மறைக்கைக்கும், புறம்புள்ளாரோடு இவனுக்குண்டான துவக்கை அறுக்கைக்கும் அதரத்தின் பழுப்பேயாத்து அவர்களுக்குப் பரிகரம். புறம்புள்ள ஸகல பந்துக்களையும் விட்டுப் பற்றினவர்களுக்கும் துர்ப்பரனாய்த் தலைக்கட்டினேன். அதாகிறது – அவர்கள் பக்கலிலும் அபகாரகனாய்ப் போந்தவனாகையாலே அவர்களுக்கும் அவனோட்டை ஸம்பந்தம் அறவேணுமென்றிருக்கை. துரிசன் – கள்ளன். தேந சாஸ்ம்யவமாநித: என்று “நீசனான ராவணனுக்கும் ஆகாதானொருவன்” என்று அவன் சொன்னாற்போலே, “தண்மைக்கெல்லையான ஸ்திரீகளுக்குமாகாதே அவர்களாலே பஹிஷ்கரிக்கப்பட்டேன் நானொருவன்” என்கிறார்.

**விளக்கம்** – பெரியபெருமாள் ஆழ்வாரிடம், ”உறவினர்களுக்கு ஒருவன் ஆகாதவனாக இருந்தாலும், தன்னுடைய மனதிற்குப் பிடித்தமான பெண்களுக்காவது ப்ரியமானவனாக இருப்பான். நீவிர் அது போன்றாவது உள்ளீர்களா?”, என்று கேட்க விடை அளிக்கிறார். (துவர்த்த) – தங்களது உள்ளத்தில் மறைந்து கிடக்கும் தீயகுணங்களைக் காண்பிக்காமல், சிவந்த உதடுகளைக் காண்பித்து வசப்படுத்திக்கொள்ள முயல்வார்கள். இவனும் அவர்களின் உள்ளத்தில் இருக்கும் குற்றங்களை அறியமாட்டான். தன்னிடம் அவர்களுக்கு உண்மையான அன்பு ஏதும் இல்லை என்பதையும் உணரமாட்டான். அவர்களது உதடுகளின் அழகின் பின்னே ஏதேனும் ஆபத்து உள்ளதா என்று ஆராயாமல், சிக்கிக்கொள்வான். தங்களது உள்ளத்தில் உள்ள குற்றங்களை

மறைப்பதற்கும், இவனை இவனது உறவினர்களிடமிருந்து பிரிப்பதற்கும் அவர்களது வாயழகையே கருவியாகப் பயன்படுத்துவார்கள். இப்படியாக எனது அனைத்து உறவினர்களையும் யாருக்காக விட்டுப் பற்றினேனோ அந்தப் பெண்களையும் நான் தள்ளினேன். அதாவது, அவர்களுக்கும் நான் தீமை செய்த காரணத்தினால், “இவனுடனான தொடர்பை நாம் அறுத்துக் கொள்ளவேண்டும்”, என்று அவர்கள் முடிவுசெய்யும்படியாக எனது செய்கை இருந்தது. துரிசன் என்றால் கள்ளன் என்று பொருள். இராமாயணம் – தேந ஸாஸ்ம்யவமாநித: - இராவணனாலும் அவமதிக்கப்பட்டவன் – என்று ”மிகவும் தாழ்ந்தவனான இராவணனுக்கும் நான் ஆகாதவனாகிவிட்டேன்” என விபீஷணன் கூறினான். இதே போன்று, “தாழ்வுகளின் எல்லையாக உள்ள பெண்களுக்கும் நான் வேண்டாதவனாகி, அவர்களாலும் ஒதுக்கப்பட்டேன்”, என்கிறார்.

**வ்யாக்யானம்** – ஆனபின்பு (அவத்தமே பிறவி தந்தாய்) – தேவரீர் எனக்கு ஜந்மத்தை வ்யர்த்தமே தந்தருளினீராய்ப் பலித்தது. தம்முடைய கர்மமடியாக வந்த அநர்த்தத்தை அத்தலையிலே ஏறிடுவானென்னென்னில், கர்மஸ்வரூபத்தையும் ஸ்வஸ்வரூபத்தையும் உள்ளபடி அறிந்தவராகையாலே அருளிச்செய்கிறார். கர்மமாவது – ஈச்வர ஹ்ருதயத்திலே நிக்ரஹ ரூபேண நின்று பலிப்பதொன்று. ஸகலப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளும் ஈச்வராதீநமாம்படியாய்த்து ஸ்வரூபமிருப்பது, கர்மத்தைப் பொறுத்தோமென்னப் போமதொன்று. ததாமி புத்தியோகம் தம் என்கிறபடியே புத்தி ப்ரதாநம் பண்ணி நல்வழி போக்குமிடத்தில் நிவாரகரில்லை; ஆக இவ்வளவு உணர்ந்த இவர்க்குச் சொல்லலாமிறே. கிணற்றில் விழுந்த ப்ரஜையைக் கண்டு தாய் பேசாதேயிருந்தால் “தாய் தள்ளினாள்” என்னக் கடவதிறே. (அரங்கமாநகருளானே) – ஸாஸ்த்ரங்களாலே மீட்கவொண்ணாதபடி கர்மபரதந்த்ரராய் விஷயாந்தர ப்ரவணராயிருப்பாரை, அழகாலும் சீலத்தாலும் மீட்கைக்காகவன்றோ கோயிலிலே வந்து கண்வளர்ந்தருளுகிறது.

**விளக்கம்** – (அவத்தமே பிறவி தந்தாய்) – இப்படியாகப் பல கோணங்களில் ஆராயும்போது, நீ எனக்கு அளித்த இந்தப் பிறவியானது பயனற்றுப் போய்விட்டது என்றே கூறலாம். இங்கு ஒரு கேள்வி எழலாம் – தன்னுடைய முற்பிறவி கர்மங்களின் காரணமாக வந்த தாழ்வை, அவன் அளித்ததாக இவர் எப்படிக் கூறலாம்? கர்மத்தின் ஸ்வரூபம் என்ன, தன்னுடைய ஸ்வரூபம் என்ன என்பதை உள்ளது உள்ளபடி இவர் அறிந்தவர் என்பதால் இவ்விதம் கூறினார். கர்மம் என்பது – ஜீவனது ஸ்வரூபத்திற்கு ஏற்ற பயனை அடைய இயலாதபடி ஈச்வரன் செய்கின்ற தடைகளே ஆகும். ஜீவனால் ஏற்கப்படக்கூடியது, தள்ளப்பட வேண்டியது என்று உள்ள அனைத்தும் ஈச்வரனுக்கு வசப்பட்டவை என்று கூறலாம்படியாக ஜீவனின் ஸ்வரூபம் உள்ளது. எம்பெருமான் ஜீவனைப் பார்த்து, “நான் உன்னைப் பொறுத்தேன்” என்று கூறினால், அந்த நொடியிலேயே கர்மம்

அகலக்கூடியதாகும். கீதை (10-10) - ததாமி புத்தியோகம் தம் – என்னை அடைவதற்கான யோகத்தை நானே அளிக்கிறேன் – என்று கூறுவதற்கு ஏற்ப, ஜீவனுக்கு நல்ல புத்தி உண்டாக்கி, இவனை நல்ல வழியில் அழைத்துச் செல்லவேண்டும் என்று ஈச்வரன் எண்ணிவிட்டான் என்றால், அவனைத் தடுக்க யாரும் இல்லை. இதனை இவர் அறிந்தவர் என்பதால், "வீணான பிறவியை அளித்தாய்" என்றார். தனது குழந்தைக் கிணர்ரில் விழுகின்றபோது அதனை அதன் தாய் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தால், "தாய் குழைந்தையைக் கிணற்றில் தள்ளினாள்", என்று கூறுவார்கள் அல்லவா? அது போன்றே இங்கு இவர் கூறுகிறார். (அரங்கமாநகருளானே) – சாஸ்த்ரங்களால் திருத்த இயலாதபடி, கர்மங்களின் வசப்பட்டு, அது இட்டுச் செல்கின்ற "உலகவிஷயங்களை அனுபவித்தல்" என்னும் பாதையில் ஒருவன் செல்லக்கூடும். இப்படிப்பட்டவர்களைத் தனது அழகாலும், எளைமையாலும் மீட்டு, தனது கைங்கர்யத்தில் ஈடுபடுத்திக் கொள்வதற்காக அல்லவோ இவன் திருவரங்கம் பெரியகோயிலில் கண்வளர்கிறான்?

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

... தொடரும்